# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,938 – 1970 දෙසැම්බර් 24 වැනි බ්‍රහස්පතින්දා—1970.12.24

14,938 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனிதனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 1195 | ஆதனவிற்பனைகளும், குத்தகை விற்பனைகளும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்களு .. .. | 1201 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனைகளும் பிறவும் .. .. | 1203 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 1203 |


## பதவிகள்—வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சத விதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலமுள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பன வற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைச் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## ஆயுள்வேதத் திணைக்களம்

### தகைமையுள்ள மருத்துவ மாதுக்கான பதவி

மத்திய ஆயுள்வேத ஆரோக்கியசாலையில் ஒரு தகைமையுள்ள மருத்துவ மாதுக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் பத்திர அமைப்பில் அமைந்து, 10.1.1971 ல் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஆயுள்வேத ஆணையாளர், கொழும்பு-8, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

2. **வேதன விகிதம்.**—ரூபா : 750—42 × 15—1380 ; (திரட்டிய சம்பளம் ரூபா 2640—16 × 60—3600). ரூபா 906, ரூபா 966 ஆகிய நிலைகளை அடையுமுன் திறமைகாண் தடைகள் உண்டு.

3. தேவையான கல்வி மற்றும் ஏனைய தராதரங்கள் :—

(அ) (i) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி, அல்லது ;

(ii) இரண்டு தடவைகளுக்கு மேற்படாது தோற்றப் பட்ட கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையின் சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உள்ளடக்கி ஆறு பாடங்களில் சித்தி, அல்லது,

(iii) இவைக்குச் சமமான வேறு பரீட்சையில் சித்தி.

(ஆ) வைத்தியக் கட்டளைச் சட்டம் (பாடம் 105) பிரிவு VI ன் கீழ் பதிவு செய்யப்பட்டவராயும்.

(இ) மருத்துவ மாதுக்கான அனுபவமிருப்பின் மேலதிகத் தராதரமாகக் கணிக்கப்படும்.

(ஈ) 10.1.1971 ல் 18 வயதிற்கு குறையாமையும், 35 வயதிற்கு மேற்படாமையும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு வயதுக்கட்டுப்பாடெல்லை பாதிக்கப்படமாட்டாது).

4. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவி இளைப்பாற்றுச் சம்பளமுடையது. இப்பதவி ஆரம்பகாலத்தில் பகிரங்க சேவை சேமலாப நிதிக்குரியமைவுடன், 29.4.1957 ல் வெளியான திறைசேரி சுற்றுநிருப இலக்கம் 372 ன் நியதிப்படி 10 வருடச் சேவைக்குள் **எவ்வாறேனும்** இளைப்பாற்றுச் சம்பள சேவைக்குட்படுவர்.

5. கீழ்க் காண்பவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (குறிப்பு.—ஞானஸ்நானச் சான்றிதழோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கமைய வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) அண்மையில் பெறப்பட்ட இரு குணச் சான்றிதழ்கள்.

(இ) வைத்தியக் கட்டளைச் சட்டம் (பாடம் 105) பிரிவு VI ன் கீழ் மருத்துவ மாதுவாகப் பதியப்பட்ட சான்றிதழ்.

6. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பகுதி இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டுள்ள பிரமாணங்கள் இப்பதவிக்கும் அமைவதாகும். தயவு செய்து இப்பிரமாணங்களைப் பார்வையிடுக.

விமல் நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேதத் திணைக்களம்,
கொழும்பு-8,
9.12.1970.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### ஆயுள்வேதத் திணைக்களம்

### தகைமையுள்ள மருத்துவ மாதுக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.
(பெரிய எழுத்தில்)
2. தபால் விலாசம் :————.
3. சாதியம் :————.
4. விண்ணப்பதாரியின் பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திர பிரதி இணைத்தல் வேண்டும்).
5. விண்ணப்பதாரியின் தந்தையின் பிறந்த திகதியும் இடமும் : ————.
6. விவாகமானவரா அல்லது தனியாளா ? :————.
7. கல்வித் தராதரங்கள் :—
(1) சிங்களம் :————
(2) தமிழ் :————.
(3) ஆங்கிலம் :————.
8. மருத்துவமாதுவாகப் பதியப்பட்ட பதிவு இலக்கம் :————.
(சான்றிதழின் பிரதி இணைத்தல் வேண்டும்)
9. பாடசாலையிலிருந்து விலகியபின் வகித்த பதவிகளும், திகதிகளும், சேவை விபரங்களும் :————.
10. வேறு விசேட தராதரங்கள் :————.
11. அண்மையில் பெறப்பட்ட இரு குணச்சான்றிதழ்கள் : ————.
(பிரதிகள் இணைத்தல் வேண்டும்)

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12-920—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

## நிருவாகக் கல்விக் கழகம்

### வரிநிருவாகம் சம்பந்தமான சர்வதேசப் பயிற்சி கல்வி ஆண்டு—1971/72, ஹாவர்ட் சட்டப்பாடசாலே

ஐக்கிய அமெரிக்காவின் ஹாவர்டில் மேற்படி புலமைப் பரிசில்களே அளிப்பதற்கு இலங்கை அரசாங்க நிருவாக சேவையிலுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

காலம்.—கல்வி ஆண்டு 1971/72.

தகவுத்திறன்—

(i) 28-30 வயதுக்கிடையில்

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன் பதவியினர் தரத்தில் ஐந்து வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் 627 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓர் உடன்படிக்கை செய்யுமாறு வேண்டப்படுவர்.

பயிற்சி நெறியின் நோக்கங்கள்.—

(i) அபிவிருத்தியடையும் நாடுகளில் வரிச் சீரமைப்பு

(ii) வரி நிருவாகம்

(iii) வரிச் சட்டம்.

அளிப்புகளுக்குரிய நியதிகள்.—

(i) ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்வதற்கும் திரும்பி வருவதற்குமான பயணச் செலவு.

(ii) வாழ்க்கை, பிரயாணப் படி.

(iii) உடுதுணிப் படி.

விண்ணப்பங்கள்

இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1971, சனவரி 22 ஆந் தேதிக்குப் பிந்தாமல் சம்பந்தப்பட்ட நிரந்தரச் செயலாளர் மூலம் நிருவாகக் கல்விக் கழகப் பணிப்பாளர், 28/10, லோங்டன் இடம், கொழும்பு 7 என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

எச். எஸ். வனசிங்க,
நிருவாகக் கல்விக்கழகப் பணிப்பாளர்.

நிருவாகக் கல்விக்கழகம்,
28/10 லோங்டன் இடம்,
கொழும்பு 7.
16 டிசம்பர், 1970.

### ஐக்கிய அமெரிக்காவில் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்

பகுதி I

1. விண்ணப்பிக்கும் பயிற்சி நெறியின் பெயர் :————.
2. உத்தியோகத்தரின் பெயர் (கடைசிப் பெயர் முதலில்) :————.
3. பிறந்த தேதி :————.
4. சேவையுந் தரமும் :————.
5. அரசாங்க சேவையில் சேர்ந்த தேதி :————.
6. அரசாங்க சேவையில் வகித்த பதவிகளும் தேதிகளும் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. மொழிகளில் தேர்ச்சி ————.:
9. உத்தியோகத்தர் பங்குபற்றிய வெளிநாட்டுப் பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் முதலியன :————.
10. உத்தியோகத்தர் இலங்கையில் பயின்றுள்ள பயிற்சி நெறிகள் அல்லது பிற கல்வி முயற்சிகள் என்பவற்றின் விபரங்கள்.:————.
11. சட்டக்கல்வித் தகைமை பற்றிய விபரங்கள் :————.
12. மேலே (9), (10) இல் கூறியுள்ள முயற்சிகள் காரணமாக உத்தியோகத்தர் எவ்வேலைத்துறையிலும் செய்துள்ள மாற்றங்கள் திருத்தங்கள் பற்றிய விபரங்கள் :————.

........................ஆகிய நான், இங்கு நான் தந்துள்ள கூற்றுக்கள் யாவும் எனது நம்பிக்கைக்கெட்டியவரையில் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதியளிக்கின்றேன்.

பயிற்சி பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படின், இலங்கை அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர் விதிக்கும் அறிவுறுத்துதைகளே நிறைவேற்றவும் அத்தகைய நிபந்தனைகட்கு அமைந்தொழுகவும் நான் உடன்படுகிறேன்.

————,
கையொப்பம்.

தேதி :————.

பகுதி II

........................................ திணைக்களத்தைச் சேர்ந்த ..................திரு........................ அவர்களின் விண்ணப்பம்
(பெயர்)
விதந்துரைக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. தெரிவு செய்யப்பட்டால் பயிற்சி நெறியில் பயில்வதற்கு விடுவிக்கப்படுவார்.

நிரந்தரச் செயலாளர்.
........................அமைச்சு.

தேதி :—

12-918—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938.

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

### கொழும்பு மாவட்டம்

1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ம் திகதி வெளியிடப்பட்ட இல. 14,933 ஐக் கொண்டுள்ள அரசாங்க வர்த்தமானியில் கொழும்பு மாவட்டத்தில் கிராம சேவையாளர் வெற்றிடங்களுக்குக் கோரப்பட்ட விண்ணப்பங்கள் பற்றிய அறிவிப்பு கீழே உள்ளபடி திருத்தப்பட்டுள்ளது :—

(iv) பரீட்சார்த்திகள் :

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூயகணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் ; அல்லது

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரராக (உயர்தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.— சிங்களம் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

உப பந்தி iv உப பந்தி முழுவதையும் நீக்கிப் பின் வருவனவற்றைப் பதிலீடு செய்தல் :—

(iv) பரீட்சார்த்திகள்—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராமசேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம் ; அல்லது

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும் ; அல்லது

(இ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவர்களாக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்கள் இதற்கு அளிக்கப்படவேண்டும்.

குறிப்பு.— பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில், பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

7. நேர்முகப் பரீட்சை.—முழுப் பந்தியையும் நீக்கிப் பின்வருவன வற்றைப் பதிலீடு செய்தல்.

**7. நேர்முகப் பரீட்சை.—**

(i) 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சையில் தோற்றம் பண்பியல்புகள், தலைமை யேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பாண்மை, விவேகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளி கள் வழங்கப்படும்.

கிராமம் தொடர்பான விடங்கள், அதன் நலன் என்பன சம்பந்த மாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தரவாரித்திட்ட அடிப் படையின் கீழ் திறமை வரிசைக் கிரமத்தில ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண் ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமை களில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடை கிருர்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித் திட்டத்தின் கீழ் போதியளவு புள்ளி களைப் பெற்றிருந்தாலன்றிப் பரீட்சார்த்தி எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்.

உதாரணம்.—10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின் கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்த வரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறு வதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளை யாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட் சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிப்பிடப் பட்டுள்ளவாறு, வெற்றிடங்களின் பெருக்கங்களுக்குக் குறை வாக இருக்கமாட்டாது.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவேண்டி யோரின் எண்ணிக்கை |
|---|---|
| 5 அல்லது அதற்குக் குறைய .. | 75 |
| 6—10 .. .. | 120 |
| 11—15 .. .. | 150 |
| 16—20 .. .. | 160 |
| 21—25 .. .. | 175 |
| 26—30 .. .. | 180 |
| 31—35 .. .. | 185 |

(iv) கீழே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் களின் மூலப்பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின் கீழ் தகுதிபெற்றிராத பரீட்சார்த்தி கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதுவிடின் அது அவர் தகுதி பெறறிராமையே காரணமாக இருக்கும்.

விண்ணப்பங்கள் கடைசியாக ஏற்றுக்கொள்ளும் திகதி 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

டி. டபிள்யூ. த அல்விஸ்,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

கச்சேரி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் வ.

12–970—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

---

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் திகதி 14,932 இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறிய சேவையையிட்டு பின்வருவன உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

4 ம், 5 ம், 6 ம், 7 ம் பந்திகள் கீழ்க்கூறப்பட்டவாறு திருத்தியமைக்க ப்பட்டிருக்கின்றது.

4. தகைமை.—(iv) ம் உபபந்தியை அகற்றிவிட்டு பின்வருவனவற்றைச் சேர்க்குக.

(iv) பரீட்சார்த்திகள் :

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண் கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன் குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச்சித்தி அடைந்திருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரணம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண் கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச்சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் ; அல்லது

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தி யெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர்தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—சிங்களம் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

5. 15.12.1970 என்ற திகதியை அகற்றிவிட்டு, 31.1.1971 என சேர்க்கவும். உபபந்தி (VI)—உப பந்தி முழுவதையும் நீக்கிப் பின்வரு வனவற்றைப் பதிலீடு செய்தல்.

(VI) பரீட்சார்த்திகள்—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில தாம் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத் தில குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தர மாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராம சேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும், வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவையும் இதற்கு ஆதார மாக அளிக்கலாம், அல்லது

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்று படுத்தல் வேண்டும், அல்லது

(இ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந் தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு.—பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப் படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருத்தப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்கள் பிள்ளைகள் விடயத்தில், பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

7. நேர்முகப் பரீட்சை.—முழுப்பந்தியையும் நீக்கிப் பின்வருவன வற்றைப் பதிலீடு செய்தல்.

7. நேர்முகப் பரீட்சை.—(i) 100 புள்ளிகளைக்கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சையில் தோற்றம், பண்பியல்புகள், தலைமையேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பாண்மை, விவேகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளிகள் வழங்கப்படும். கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலுமிருந்து தரவாரித்திட்ட அடிப்படையின்கீழ் திறமை வரிசைக்கிரமத்தில ஆகக்கூடிய மொத்த புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமைகளில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடைகிருர்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித் திட்டத்தின் கீழ் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருந் தாலன்றிப் பரீட்சார்த்தி எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படமாட்டார்.

உதாரணம்.—10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின் கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்தவரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப்பரீட்சைக்கு அழைக் கப்படுவதற்கு தகுதி பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிக்கப்பட்டுள்ளவாறு வெற்றிடங்கள் பெருக்கங்களுக்குக் குறைவாக இருக்கமாட்டாது.

| வெற்றிடங்கள் எண்ணிக்கை | | | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 5 அல்லது அதற்குக் குறைய .. | | .. | 75 |
| 6—10 | .. | .. | 120 |
| 11—15 | .. | .. | 150 |
| 16—20 | .. | .. | 160 |
| 21—25 | .. | .. | 175 |
| 26—30 | .. | .. | 180 |
| 31—35 | .. | .. | 185 |

(IV) கீழே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்பிக்க வேண்டும்.

(V) மேற்போந்த நிபந்தனையின் கீழ் தகுதி பெற்றிராத பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாவிடின் அது அவர் தகுதி பெற்றிராமையே காரணமாக இருக்கும்.

விண்ணப்ப முடிவு திகதி 1971 ம் ஆண்டு தை மாதம் 31 ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கே. பீ. சூரியகொட,
அரசாங்க அதிபர்,
பொலன்னறுவை.

பொலன்னறுவைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 14 ந வ.

12-963—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938.

---

## கிராமசேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

### அம்பாந்தோட்டை மாவட்டம்

கிராமசேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு விடயமாக 1970 ம் வருடம் நவம்பர் மாதம் 12 ந் திகதி வெளியாகிய இலங்கை அரசாங்க வர்த்தமானியின் 14,932 ம் இலக்க அறிவித்தலுக்கு உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

4 ம் பிரிவிலுள்ள iv வது vi வது உபபிரிவுகளும், 7 ம் பிரிவும் கீழ்க் குறிப்பிட்டவாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

4. தகைமை :

(iv) பரீட்சார்த்திகள்—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது,

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூயகணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்; அல்லது,

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர்தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—சிங்களம் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியில் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(vi) பரீட்சார்த்திகள்—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் இந்த மாவட்டத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராமசேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம் ; அல்லது

(ஆ) இம்மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும் ; அல்லது,

(இ) இம்மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு.—பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிடுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில உள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில, பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

7. நேர்முகப் பரீட்சை :

(i) 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும் பரீட்சையில், தோற்றம், பண்பியல்புகள் தலைமையேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை மதிப்பான்மை, விவேகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளிகள் வழங்கப்படும்.

கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலம் என்பன சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்கு முகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) தரவாரித் திட்ட அடிப்படையின் கீழ் திறமை வரிசைக்கிரமத்தில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமைகளில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடைகிறார்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித் திட்டத்தின் கீழ்போதியளவு புள்ளிகளைப் பெற்றிருந்தாலன்றி பரீட்சார்த்தி எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்.

உதாரணம்.— 10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின் கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்தவரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வெற்றிடங்களின் பெருக்கங்களுக்குக் குறைவாக இருக்கமாட்டாது.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | | | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 5 அல்லது அதற்குக் குறைய.. | | | 75 |
| 6—10 | .. | .. | 120 |
| 11—15 | .. | .. | 150 |
| 16—20 | .. | .. | 160 |
| 21—25 | .. | .. | 175 |
| 26—30 | .. | .. | 180 |
| 31—35 | .. | .. | 185 |

(iv) கீழே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின் கீழ் தகுதிபெற்றதாக பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதுவிடின் அது அவர் தகுதிபெற்றிராமையே காரணமாக இருக்கும்.

எனவே 1971.1.15 ந் திகதிவரை விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுவதற்காகக் காலவரை நீடிக்கப்பட்டுள்ளது.

எஸ். டபிள்யூ. குணவர்தன,
ஹம்பாந்தோட்டை மாவட்ட
அரசாங்க அதிபர்.

ஹம்பாந்தோட்டைக் கச்சேரி.
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 9 ந வ.

12-954—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

### கிராமசேவையாளர் நியமனம்

நுவரேலியா மாவட்டத்தில் 13 கிராமசேவையாளர் நியமனம் பற்றிய 1970 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 20 ம் திகதி வெளியாகிய இல. 14,933 அரசாங்க வர்த்தமானி விளம்பரத்தில் கீழ்க்குறிக்கப்பட்ட மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதில் குறிக்கப்பட்ட பந்தி எண்களைக் கீழ்க் குறிக்கப்பட்ட எண்களுடன் ஒப்பிட்டு மாற்றங்களை கவனத்திற்கு கொண்டுவரல் வேண்டும்.

(iv) பரீட்சார்த்திகள் :

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தாரதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தாரதரப் பத்திரம் (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது வர்தக கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் ; அல்லது,

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தாரதரப் பத்திரதாரராக (உயர்தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : சிங்களம் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி.பா.த. பரீட்சையில் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(vi) பரீட்சார்த்திகள் :

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் நுவரேலியா மாவட்டத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராமசேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப் படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம் ; அல்லது,

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நுவரேலியா மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும் ; அல்லது

(இ) வெற்றிடம் ஏற்படும் நுவரேலியா மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்படவேண்டும்.

குறிப்பு : பெற்றோர் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில், பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

7. நேர்முகப் பரீட்சை.—முழுப் பந்தியையும் நீக்கிப் பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்.

7. நேர்முகப் பரீட்சை.—(i) 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சையில் தோற்றம், பண்பியல்புகள், தலைமையேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பான்மை, விவேகம் முதலியனவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளிகள் வழங்கப்படும். கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்கு முகமாக வினுக்கள் கேட்கப்படும்.

(ii) இம்மாவட்டத்தில் இருந்து தரவாரித்திட்ட அடிப்படையின்கீழ் திறமை வரிசைக் கிரமத்தில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேலே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமைகளில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடைகிறார்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும்வகையில் தரவாரித்திட்டத்தின்கீழ் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருந்தாலன்றிப் பரீட்சார்த்தி எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

உதாரணம் : 10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின் கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்தவரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) இம் மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை 150 ஆகும்.

(iv) மேலே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின்கீழ் தகுதிபெற்றிராத பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாவிடின் அது அவர் தகுதி பெற்றிராமையே காரணமாக இருக்கும்.

இந்த மாற்றங்கள் நிமித்தம் விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ற்கு பின்போடப்பட்டிருக்கின்றது. தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை ஏற்கனவே அனுப்பியுள்ளவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

பீ. எம். விஜெயகோன்,
அரசாங்க அதிபர்,
நுவரேலியா மாவட்டம்.

12-911—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

---

### கல்வி அமைச்சு

### மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் தாரதரப் பத்திரமற்ற ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு

தாரதரப் பத்திரமற்ற ஆசிரியர் பதவிகளுக்கு சிரேட்ட பாடசாலைத் தாரதரப் பத்திரம் அல்லது சமமான தகைமைகள் பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி, 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய 14,921 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 5 (ஆ) ஆம் பந்தி இத்தால் பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகின்றது :

"18.9.1970 அன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 1.1.1971 அன்று 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும்."

இத்திருத்தத்துக்கு அமையாத விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

பீ. உடகம,
நிரந்தரச் செயலாளர்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு-2,
1970 டிசம்பர் 17.

12-919—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

### பதுளைமாவட்டத்தில் பின்தன்னை மேற்கு பிரிவிற்கு பிறப்பு இறப்பும் பின்தன்னை பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி

பின்தன்னை மேற்கு பிரிவிற்கு பிறப்பு, இறப்புப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தியொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம் அரசாங்க சேவையில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்களும் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராமசேவையாளர்களின் அலுவலகத்திலும் உள்ளூராட்சிச்சபை அலுவலகத்திலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பி. எஸ். விஜேவீர,
மாவட்ட பதிவாளர்.

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
பதுளை,
1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ம் திகதி.

12-887—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

---

### திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் பகுதிப் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி

தோப்பூர் பிறப்பு, இறப்புப் பகுதியில் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பகுதியில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண், பெண் இருபாலரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்களும் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராமசேவையாளர்களின் அலுவலகத்திலும் உள்ளூராட்சிச்சபை அலுவலகத்திலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

டப்ளியு. எல். பெர்னுன்டோ,
மாவட்ட பதிவாளர்.

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
திருகோணமலை,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 10 ந் உ.

12-877—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு
### ஒரு பாற்சாலையைத் திறப்பதற்கு கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் நிலம்

மேற்கூறிய நிலத்தை குத்தகையில் கொடுப்பதற்கெனப் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1971-1-14 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை கப்பற்றுறை ஆணையாளர் ஏற்றுக் கொள்வார். இக் குத்தகையின் காலம் கப்பற்றுறை ஆணையாளர் நிட்சயிக்கும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்காகும்.

2. அவருடைய அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவங்களில் இணைப்பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் ரூபா 100/- கட்டுப் பணமாகச் செலுத்தப்பட்ட பின்னர்தான் இப் படிவங்கள் வழங்கப்படும்.

3. 1971-1-12 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லா வேலை நாட்களிலும் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

4. குத்தகை சம்பந்தமான நிபந்தனைகள் கேள்விப் பத்திரப் படிவங்களுடன் கொடுக்கப்படும்.

12-899—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

---

### கமத்தொழிற் சேவை திணைக்களம்
### 1971 ம் ஆண்டு பூநகரி நெற்களஞ்சியத்தில் ஏற்றி இறக்கும் வாகன சேவைக்கான கூறு விலைகள்

மேற்கூறிய சேவைக்கான கூறு விலைகள் 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் திகதி காலை 11 மணி வரைக்கும் யாழ்ப்பாணம், கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. யாழ்ப்பாணம் கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரிடமிருந்து 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் திகதி காலை 10 மணி வரை பெறக்கூடிய சேவை சம்பந்தமான பத்திரங்கள் இணைப்பிரதிகளில் அனுப்பித்தல் வேண்டும். இதனைப் பற்றிய மேலதிக விபரங்களையும் தகவல்களையும் யாழ்ப்பாணம், கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கூறு விலைகளுக்கான பத்திரங்கள் கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "யாழ்ப்பாணம், கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர்" என்று விலாசமிட்டு 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் திகதி (12.1.1971) காலை 11 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக சேர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு கூறுவிலை மேல் உறையிலும் "பூநகரி நெற்களஞ்சிய ஏற்று இறக்கு வாகன சேவைகளுக்கான கூறு விலைகள்" என்று எழுதப்படல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப் பெற்ற கூறு விலைப் பத்திரங்கள் கவனத்திற் கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

4. இக்கூறுவிலைகள் பத்திரங்கள் கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர் காரியாலயத்தில் 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் திகதி காலை 11 மணிக்கு திறக்கப்படும். இப்பத்திரங்கள் அனுப்பியோர் சமுகம் தரலாம்.

க. சபாரத்தினம்,
கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர்.

கமத்தொழிற் சேவை திணைக்களம்,
அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம், 16.12.70.

12-922—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

## அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம்

### யாழ்ப்பாணம் பழைய அஞ்சல் அலுவலகக் கட்டிடத்தைத் தகர்த்தல்

பகிரங்க வேலைப் பகுதியில் அல்லது அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து மேலே குறிப்பிட்ட கட்டிடத்தைத் தகர்ப்பதற்கும், அவ்விடத்தைத் துப்பரவு செய்வதற்குமான கேள்விப்பத்திரங்கள் 12.1 1971 மு. ப. 10.00 மணிவரை, கொழும்பு 1 ல் உள்ள அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகக் கட்டிட மேலதிகப் பிராந்தியக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 12.1.1971 அன்று மு. ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரதாரர்கள் விரும்பின் கேள்விப்பத்திரம் திறக்கப்படும்பொழுது பிரசன்னமாயிருக்கலாம்.

3. யாழ்ப்பாணம் (வட) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பு 5, நாரயன்பிட்டியில் உள்ள, உபகரண, கட்டிட, நலன்புரி, களஞ்சிய உதவி அத்தியட்சரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களில் கேள்விப்பத்திரங்கள் தயார் செய்யப்படல் வேண்டும்.

4. கொழும்பு 1 ல் உள்ள பிரதான அஞ்சல் அலுவலக விசாரணை கருமபீடம் (இல 4) அல்லது யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தில் ரூ. 50/- வைப்புப் பணமாகச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவருக்குக் கேள்விப் பத்திரங்கள் 26.12.1970 தொடக்கம் 2.1.1971 அன்று பி. ப. 4.30 வரை வழங்கப்படும்.

சி. ஜே. சேரசிங்க,
பதில் அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும்.

த. த. போ. தலைமை அலுவலகம்.
கொழும்பு 1.

12-888—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

---

இல: இப. 260 (707/1).

## காலிக் கச்சேரி

காலி மாவட்டத்தில், கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்கு 1971 ஜனவரி மாதம் 20 ந் தேதி பிற்பகல் 2.30 மணிவரை காலி அரசாங்க அதிபரினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விக் காரர்கள் அக்காரியாலயத்தில் சமுகமாயிருக்கலாம். காலிக் கச்சேரியில் உதவி அரசாங்க அதிபரின் அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டிவைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட படிவங்களில் இணைப் பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமாயுள்ள இடத்தை மேற்படி அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் பார்த்துக்கொள்ளக்கூடியதாயுள்ளதுடன் அதனையிட்டுள்ள முழு விபரங்களையும் அவரிடமிருந்தே பெற்றுக் கொள்ளலாம்.

3. அரசாங்கவேலை, நீர்ப்பாசனம் அல்லது கல்வித் திணைக்களங்களில், அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பதிவு செய்துகொண்டுள்ள இவ்வித வேலைகளை திறமையாகச் செய்துமுடிக்கக்கூடிய தகுதியுள்ள கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும், அவ்வாறு பதிவு செய்துகொண்டுள்ள தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் இவ்வேலைகளுக்குக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். அவ்வாறு அவர்கள் பதிவு பெற்றுள்ளமையையும் திறமை சம்பந்த சாட்சிப பத்திரங்களையும் ரூபா 100/- ஐ கேள்வி வைப்புப் பணமாச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினையும் மேற்படி அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். 1971 ஜனவரி மாதம் 17 ந் தேதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விக்குரிய படிவங்கள் வழங்கப்படும். பதிவு பெற்றுள்ள சங்கங்கள் கேள்விவைப்புப் பணம் செலுத்தத் தேவையில்லை. ஆயினும் அவ்வச் சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட திறமை சம்பந்தமான சாட்சிப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்வி வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "................................. க்கான கேள்விப் பத்திரம்" எனக்குறிப்பிட்டு எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரை (ஸீல்) வைத்துப்பாதுகாப்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

டப். எல். ஆர். பி. த அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, காலி,
19'0 ம் ஆண்டு திசம்பர் மீ 4 ந் உ.

### அட்டவணை

| வேலை விபரம் | அமைந்துள்ள இடம் | பதிவுசெய்திருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| 1. உடுமலகல குடியேற்றப்பாதை 3 வது மைலை அமைத்தல் | தல்பே பத்துவ | .. 15,000/- |
| 2. மாகெதறஉடுவெல்ல—நிமலவ 2 வது மைலில் எஞ்சியவேலை | தல்பே பத்துவ | .. 10,000/- |
| 3. பட்டுவங்கல குடியேற்ற அதிகாரியின் வீட்டைத்திருத்தல் | உறினிதும் பத்துவ | .. 10,000/- |
| 4. றத்மெகாவத்தையில் இரு பொதுக்கிணறுகள் அமைத்தல் | கங்கபொடரபத்து (தெ) | .. 10,000/- |
| 5. திவிதுற தோட்டத்தில் இரு பொதுக்கிணறுகள் அமைத்தல் | ஷை | .. 10,000/- |
| 6. ரஜமுக்கலான குடியேற்றத்தில் இரு பொதுக்கிணறுகள் அமைத்தல் | நாலுகடவத்தை | .. 10,000/- |
| 7. லன்சியாஹேன குடியேற்றத்தில் ஒரு பொதுக்கிணறு அமைத்தல் | ஷை | .. 5,000/- |
| 8. பந்துகொட குடியேற்றத்தில் ஒரு பொதுக்கிணறு அமைத்தல் | ஷை | .. 5,000/- |
| 9. அங்கொக்காவல குடியேற்றத்தில இரு பொதுக்கிணறுகள் அமைத்தல் | ஷை | .. 10,000/- |
| 10. கலகொட குடியேற்றத்தில் ஒரு பொதுக்கிணறு அமைத்தல் | வெல்லபொட பத்துவ | .. 5,000/- |
| 11. கொன்வில குடியேற்றத்தில் ஒரு பொதுக்கிணறு அமைத்தல் | நாலு கடவத்தை | .. 5,000/- |
| 12. எட்டவலவத்தையில் இரு பொதுக்கிணறுகள் அமைத்தல் | பெ.வ.கோ. (மே) | .. 10,000/- |
| 13. தன்வலவத்த வீதி அமைத்தல் | தல்பே பத்துவ | .. 10,000/- |

12-890—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## ஆயுர்வேதத் திணைக்களம்

### பாவனைக் குரியதற்ற பொருட்கள் ஏலவிற்பனை

கொழும்பு, ஆயுர்வேத ஆரோக்கியசாலையில் உடைந்த பாவனைக் குரியதற்ற பொருட்கள், போத்தல்கள், சாக்குகளும் 16.1.1971 அன்று கொழும்பு-8 ல் உள்ள ஆயுர்வேதத் திணைக்களத்தில் காலை 10.00 மணிக்கு பிரசித்த ஏல விற்பனையில் விற்கப்படும்.

ஏலத்தில் விற்கப்பட்ட முழுத் தொகையினையும் விற்பனவு முடிவடையும் போது உடனடியாகச் செலுத்துதல் வேண்டும்.

16.1.1971 ல் மாலை 4.00 மணிக்கு முன்னதாக வாங்கப்பட்ட பொருட்கள் யாவும், ஆயுர்வேதத் திணைக்களத்தில் சுற்றுடலிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். அதன் பின்னர் ஏற்படும் எவ்வித நஷ்டங்களுக்கும், சேதங்களுக்கும் ஆயுர்வேத ஆணையாளர் பொறுப்பாகமாட்டார்.

ஏல விற்பனைக்குரிய பொருட்கள் யாவும் விற்பனவுத் தினத்தன்று பகிரங்கப் பார்வைக்கு வைக்கப்படும்.

ஆயுர்வேத ஆணையாளர்.

ஆயுர்வேதத் திணைக்களம்,
கொட்டா ரோட்,
கொழும்பு-8.
10.12.1970.

12-880—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

---

# நானாவித அறிவித்தல்கள்

## பாடசாலை உபயோகத்திற்கெனக் கல்வி நூற் பிரசுர ஆலோசனைச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடப்புத்தகங்களினதும் உப-பாடப்புத்தகங்களினதும் பூரண அட்டவணை

1967 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கல்வி நூற் பிரசுர ஆலோசனைச் சபையால் பாடசாலை உபயோகத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட (தமிழ்) பாடப்புத்தகங்களினதும், உப-பாடப்புத்தகங்களினதும் பூரண அட்டவணை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2. பாடசாலைகளின் உபயோகத்துக்குப் புத்தகங்களைத் தெரிவு செய்தல் “ 1.1.71 தொடக்கம் அரசினர் பாடசாலைகளின் கட்டாய உபயோகத்துக்கான புத்தகங்கள்” பற்றி கல்வி அலுவல அமைச்சரால் 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ந் திகதி விடுக்கப்பட்ட ஆ.க. 11/150 ம் இலக்கமும், கல்வி அலுவல் அமைச்சு சுற்று நிருப இலக்கம் 180 சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமையும்.

3. பாடசாலை உபயோகத்திற்குத் தற்பொழுது செல்லுபடியான பாடப்புத்தகங்களும், உப-பாடப்புத்தகங்களுமே இவ்வட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ளன என்பதைக் கவனிக்கவும். அங்கீகாரங்களின் செல்லுபடி முடிவடைந்தவைகளும் இச்சபையால் மீண்டும் அங்கீகாரம் அளிக்கப்படாதவைகளுமான பாடப்புத்தகங்களும் உப-பாடப்புத்தகங்களும் நீக்கப்பட்டுள்ளன.

4. சுலபமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு பாடப்புத்தகங்கள் வெவ்வேறு பாடங்களின் கீழும், அங்கீகாரக் காலவெல்லையை வகுத்துக் காட்டும் அட்டவணையின் கீழும் கொடுக்கப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் பாடசாலை உபயோகத்திற்கு மேலும் செல்லுபடியாகவேண்டுமெனின் ஒவ்வொரு புத்தகமும் அங்கீகாரக் காலவெல்லை முடியும் பொழுது மீண்டும் இச்சபையால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

5. வித்தியா பகுதியாலும், கல்வி நூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்படும் பாடப்புத்தகங்கள் தவிர்ந்தவையும் இச்சபையால் சிபார்சு செய்யப்படாதவையுமான புத்தகங்களை பாடசாலை உபயோகத்திற்கு விதித்தல் குற்றமாகும்.

வித்தியா பகுதியாலும் கல்வி நூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்படும் பாடப் புத்தகங்கள், குறிப்புரைகளுடன் கூடிய இலக்கிய நூல்களின் புதுப் பதிப்புகள், சொற் தொகுதிகள், அகராதிகள், கோட்டுப்படங்கள், வரைப்படங்கள் ஆகியன இச்சபையின் அங்கீகாரத்தினின்றும் விலக்களிக்கப்பட்டன.

6. வித்தியா பகுதியாலும் கல்வி நூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்பட்டுள்ள பாடப்புத்தகங்கள் இவ்வட்டவணையில் சேர்க்கப்படவில்லை.

7. இவ்வட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள வரிசைக் கிரமம் புத்தகங்களின் சிறப்பு ஒழுங்கையோ முக்கியத்துவத்தையோ குறிப்பதல்ல.

கல்வி நூற் பிரசுர ஆலோசனைச்சபை,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 16 ந் உ.

டி. கே. சுபசிங்க,
செயலாளர்,
கல்வி நூற்பிரசுர ஆலோசனைச்சபை.

### வகுப்பு வாரிப் புத்தகங்கள்

#### தமிழ்ப்பாஷை

அங்கீகாரக் காலவெல்லை— 1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1 .. | தமிழ் மரபு .. | .. க.பொ.த.(சாதாரண)<br>க. பொ. த. (உயர்தர) | பொன் முத்துக்குமாரன் | .. வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம் |

#### உப பாடப்புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை— 1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | தமிழ் அறிவு .. | .. உயர்தர | .. க. பே. முத்தையா | .. திருமதி எம். ஜே. முத்தையா, 8 கச்சேரி-நல்லூர் ரோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் |

#### புவி இயல்

அங்கீகாரக் காலவெல்லை—19.7.69 தொடக்கம் 31.12.72 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | தற்காலப் புவியியல் | .. 7 ம் புத்தகம் | .. த. தியாகராசா, பி.ஏ. | .. ஸ்ரீ லங்கா கல்விப் பிரசுரம், கொழும்புத் துறை, யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை—9.9.68 தொடக்கம் 31.12.71 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 2 .. | எட்டாந்தரப் புவியியல் .. | 8 .. | வி. கந்தவனம், பி. ஏ. .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னுகம் |
| 3 .. | ஆரம்பப் புவியியல் .. | 8 .. | கே. குணராசா, பி. ஏ. (சிறப்பு) .. | அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 4 .. | *தற்காலப் புவியியல் .. | 8 .. | த. தியாகராசா, பீ. ஏ. .. | இலங்கா மத்திய புத்தகசாலை, கண்டி |

உப பாடப்புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை—19.7.69 தொடக்கம் 31.12.72 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | பாடசாலைகட்கான இலங்கை புவியியல் | — .. | ஏ. டி. பப்டிஸ்ற் .. | ஓறியன்ற் லோங்மன்ஸ், சென்னை |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 2 .. | *பூமிசாத்திரம் (63 ம் ஆண்டுப் பதிப்பு) | — | ஏ. டி. பப்டிஸ்ற் .. | ஓறியன்ற் லோங்மன்ஸ், சென்னை |
| 3 .. | படவரை கலையின் எறியங்கள் .. | க.பொ.த. (சாதாரண) (உயர்தர) | க. குணராசா, பி. ஏ. (சிறப்பு) .. | அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம் |

பாட நூல்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.71 தொடக்கம் 31.12.73 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | *பொற்காலப் புவி இயல் .. | 6 .. | எம். ஆர். யோசேப், ஈ. மாணிக்கவாசகர் | கலைவாணிப் புத்தக நிலையம், 10, பிரதான வீதி, யாழ்ப்பாணம் |
| 2 .. | புவி இயல் .. | VIII .. | வி. கந்தவனம், பீ. ஏ. .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிபகம், சுன்னுகம |

உப பாடம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.71 தொடக்கம் 31.12.73 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | பொற்காலப் புவி இயல் .. | VII .. | எம். ஆர். யோசேப், யே. யே. அற்புதராசா | கலைவாணிப் புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

வரலாறு

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | புதுமுறைச் சரித்திரம் (66 ம் ஆண்டுப் பதிப்பு) | 7 .. | ஆ. சபாரத்தினம் .. | கலைவாணிப் புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1 71 தொடக்கம் 31.12.73 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 2 .. | *நம் முன்னோரளித்த அருஞ் செல்வம் | பகுதி II .. | எஸ். ஏ. பேக்மன், ஜீ. சி. மெண்டிஸ் | கொழும்பு அப்போதிக்கரிஸ், 84, பிரதான வீதி, கொழும்பு 11 |

உப பாடம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | புதுமுறைச் சரித்திரம் (க.பொ.த.) பகுதி II அடங்கன் 1) | க. பொ. த. | ஆ. சபாரத்தினம் .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

குடியியல்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | புதிய குடியியல் .. | — .. | வி. சிவசுப்பிரமணியம், வ. மகாதேவன் | ஸ்ரீ காந்த் அச்சகம், யாழ்ப்பாணம் |

வர்த்தகம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | இக்கால வாணிபமுறை .. | க. பொ. த. .. | க. நவரத்தினம் .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னுகம் |

கணக்குப் பதிவியல்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 2 .. | கணக்குப் பதிவு நூல் .. | க. பொ. த. .. | க. நவரத்தினம் .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னுகம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 3 .. | கணக்கியற் சுருக்கம் .. | க. பொ. த. .. | வே. அளகேசன் .. | சரோஜ நூல் வெளியீட்டு நிலையம், 62, நெடுங்குள வீதி, யாழ்ப்பாணம் |

உப பாடம்—வாணிபம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.71 தொடக்கம் 31.12.73 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 4 .. | நடைமுறை வணிபம் .. | க.பொ.த. (சாதாரண) | ந. ஞானேந்திரன் .. | எஸ். வல்லிபுரம், எழுத்துமட்டுவாள், எஸ். அப்புத்துரை, கொககுவில் |

சுகாதாரம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | சுகாதார போதினி .. | 8 .. | கலாநிதி ச. அ. தர்மலிங்கம் .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னுகம் |
| 2 .. | சுகாதார போதினி, 1 ம், 2 ம் பாகங்கள் (1966 ம் ஆண்டுப் பதிப்பு) | க. பொ. த. .. | ஷை .. | ஷை |

அங்கீகாரக் காலவெல்லை —1.1.71 தொடக்கம் 31.12.73 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 3 .. | உடலியலும் சுகாதாரமும் பகுதி II | VI & VII .. | எஸ். வி. பி. பிள்ளை .. | எஸ். வி. பி. பிள்ளை, பண்ணை வீதி, நாரந்தனை, ஊர்காவற்றுறை |

கேத்திர கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | அறிமுறைக் கேத்திர கணிதம் 2 ம் புத்தகம் | க. பொ. த. .. | எஸ். கே. சந்திரசேகரம் .. | சுமதி கல்வி வெளியீட்டகம், யாழ்ப்பாணம் |

அட்சர கேத்திர கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | அட்சர கேத்திர கணிதம் .. | 7 .. | தோமாஸ் ஈப்பன், ஆர். சோமசுந்தரம் | லிற்றில் பிளவர் புத்தக நிலையம், கரவெட்டி |

இரசாயனம்

அங்கீகாரக் காலவெல்லை—15.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | உயர்தர ரசாயனம் .. | உயர் வகுப்பு .. | டி. கணேசர், எஸ். சிவபாலன் .. | விஜயலக்குமி புத்தகசாலை, கொழும்பு |

பொது விஞ்ஞானம்

அங்கீகாரக் காலவெல்லை—24.3.69 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | புதுமுறைப் பொது விஞ்ஞானம் .. | 7 ம் வகுப்பு .. | ஈ. நாகராசா .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.71 தொடக்கம் 31.12.73 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 2 .. | பொது விஞ்ஞான போதினி .. | VI .. | எம். பரமானந்தம், எஸ். எஸ். இரத்தினசிங்கம் | வட இலங்கை தமிழ் நூற் பதிப்பகம், சுன்னுகம் |
| 3 .. | ஷை .. | VII .. | ஷை .. | ஷை |
| 4 .. | புதுமுறைப் பொது விஞ்ஞானம் .. | VI .. | செல்வி இன்பம் சின்னத்தம்பி .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 5 .. | பொது விஞ்ஞானம், 3 ம் புத்தகம் | 8 .. | ம. சி. பிரான்சிஸ் .. | சுமதி கல்வி வெளியீட்டகம், யாழ்ப்பாணம் |

அரபுப் பாடம்

அங்கீகாரக் காலவெல்லை—15.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 .. | தகலீம் அல் அரேபியா பகுதி I .. | வகுப்பு 1—6 .. | மௌலவி ஓ. எம். பாசிஅலிப் .. | ஏ. எம். ஹபீஸ் முகம்மது, டிவிஷன் 1, சம்மாந்துறை |

சமயம்—இஸ்லாம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.71 தொடக்கம் 31.12.73 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1 .. | சாந்தி மார்க்கம் .. | II .. | மௌலவி எம். பளீல் .. | எம். ஆர். எம். முகிலார், 197, காலி வீதி, கொழும்பு 3 |
| 2 .. | சாந்தி மார்க்கம் .. | III .. | டிை .. .. | டிை |
| 3 .. | சாந்தி மார்க்கம் .. | IV .. | டிை .. .. | டிை |
| 4 .. | சாந்தி மார்க்கம் .. | V .. | டிை .. .. | டிை |
| 5 .. | சாந்தி மார்க்கம் .. | க.பொ.த. (சாதாரண) | டிை .. .. | டிை |
| 6 .. | இஸ்லாம் மத பாடம் .. | 2 .. | ஏ. எம். கனி .. .. | கலைவாணி புத்தக நிலையம், 10, பிரதான வீதி, யாழ்ப்பாணம் |

சைவசமய பாடம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1 .. | *சைவ போதினி, ஆரம்ப பிரிவு (64 ம் ஆண்டுப் பதிப்பு) | 4—5 .. | விவேகானந்தசபை .. | விவேகானந்தசபை, கொழும்பு |
| 2 .. | *சைவ போதினி, கீழ்ப் பிரிவு (64 ம் ஆண்டுப் பதிப்பு) | 6—7 .. | டிை .. .. | டிை |
| 3 .. | *சைவ போதினி, மத்திய பிரிவு (64 ம் ஆண்டுப் பதிப்பு) | 8 .. | டிை .. .. | டிை |
| 4 .. | *சைவ போதினி (மேற் பிரிவு), (64 ம் ஆண்டுப் பதிப்பு) | க. பொ. த. .. | டிை .. .. | டிை |
| 5 .. | *சைவசமய பாடத் தொகுப்பு .. | 8 .. | வட இலங்கைத் தமிழ் பதிப்பகம் .. | வட இலங்கைத் தமிழ்ப் பதிகபகம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 6 .. | சைவ போதினி—பாலர் பிரிவு .. | — .. | விவேகானந்தசபை .. | விவேகானந்தசபை, கொழும்பு |
| 7 .. | சைவசமய போதினி .. | 2 .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் |
| 8 .. | சைவசமய போதினி .. | 4 .. | டிை .. .. | டிை |
| 9 .. | சைவசமய போதினி .. | 5 .. | டிை .. .. | டிை |
| 10 .. | சைவசமய போதினி .. | 6 .. | டிை .. .. | டிை |
| 11 .. | சைவசமய பாடம் .. | 2, 3, 4, 5 .. | — .. .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 12 .. | சைவசமய போதினி .. | 3 .. | — .. .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் |
| 13 .. | சைவசமய பாடம் .. | 6, 7, 8 .. | — .. .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

*அடுத்த பதிப்புத் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

12-902—24.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,938

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாய் வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்கப் பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—அரசாங்க வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| **1971** | | | | | | |
| ஜனவரி | 8. 1.71 | வெள்ளி | 31.12.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 15. 1.71 | வெள்ளி | 8. 1.71 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 22. 1.71 | வெள்ளி | 15. 1.71 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 29. 1.71 | வெள்ளி | 22. 1.71 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| பெப்ருவரி | 5. 2.71 | வெள்ளி | 29. 1.71 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 12. 2.71 | வெள்ளி | 3. 2.71 | புதன் | பி. ப. | 3.30 |
| | 19. 2.71 | வெள்ளி | 12. 2.71 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26. 2.71 | வெள்ளி | 19. 2.71 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| மார்ச்சு | 5. 3.71 | வெள்ளி | 26. 2.71 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 12. 3.71 | வெள்ளி | 3. 3.71 | புதன் | ந. ப. | 12.00 |
| | 19. 3.71 | வெள்ளி | 10. 3.71 | புதன் | ந. ப. | 12.00 |
| | 26. 3.71 | வெள்ளி | 17. 3.71 | புதன் | ந. ப. | 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 18 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.